பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

30.06.2026

காவல் ஆய்வாளர் மற்றும் தலைமை காவலருக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.செந்தில், மேட்டுர், சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் இருசக்கர வாகனத்திற்கு எவ்வித வழக்கும் பதிவு செய்யாமல் வாகனத்தை விடுவிப்பதற்கு திரு.பி.ரவீந்திரன், காவல் ஆய்வாளர் மற்றும் திரு.இளங்கோ, தலைமை காவலர், கொளத்தூர் காவல் நிலையம், சேலம் மாவட்டம் ஆகியோர்கள் தங்களுக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 10.08.2018 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.பி.ரவீந்திரன், காவல் ஆய்வாளர் மற்றும் திரு.இளங்கோ, தலைமை காவலர், ஆகியோர்கள் லஞ்சபணம் ரூ.5,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கானது ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 36 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. **இவ்வழக்கில் இன்று 30.06.2026ந் - தேதி திரு.பி.ரவீந்திரன், அப்போதைய காவல் ஆய்வாளர் மற்றும் திரு.இளங்கோ, தலைமை காவலர், ஆகியோர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.5,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.**